## மகப்பேற்று பரிசீலனைப் பட்டியல்:

✓ கர்ப்பம் தரித்திருக்கையில் மருத்துவ பரிசோதனைகள்

✓ மகப்பேற்று வைத்தியசாலை

„கட்டில்வாரம்“

# மகப்பேற்றுக்குப் பின்னரான காலத்தினை நன்கு தயார்ப்படுத்துதல்

சிலவேளைகளில் நீங்கள் உங்கள் குழந்தையை **எதிர்வரும் குறுகிய காலத்தில் பெறறெடுக்கலாம்,** சிலவேளைகளில் இத் தவணைக்கு (திகதிக்கு) நீண்ட காலம் இருக்கலாம். உங்களது மனதில் மகப்பேறு முக்கியமானதொரு நிகழ்வாக மனக்கண்முன் இருக்கின்ற பொழுதிலும் கூட, மகப் பேற்றினைத் தொடர்ந்து வரும் **முதல் வாரங்களையிட்டு** நாம் உங்களது கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றோம் - அதாவது „கட்டில்வாரம்“ என்றழைக்கப்படுகின்றது - (இது மகப்பேற்றின் பின் கட்டிலில் ஓய்வெடுக்கும் காலம்).

ஒரு குழந்தையின் பிறப்புடன் குடும்பவாழ்க்கையும் நாளாந்த நிகழ்வுகளும் புதிய **வடிவத்தினைப்** பெறுகின்றன. புதிதாகப் பிறந்த குழந்தை (எமது) வாழ்க்கைப் பழக்க வழக்கங்களை மாற்றுவதுடன் அதன் தேவைகள் நாளாந்த நிகழ்வுகளை நிச்சயிக்கின்றன. குழந்தைக்குப் பாலூட்டுதலும் அதனைப் பராமரித்தலும் புதிய, இன்னும் பழக்கப்படாத சவால்கள் என்பதுடன், அவற்றின் நடைமுறை கற்றுக்கொள்ளப்பட வேண்டும். பகல் இரவு என்று இருபத்திநாலு மணிநேரமும் குழந்தைக்காகவே இருந்து, சொந்த விருப்புக்கள் மற்றும் தேவைகளைப் புறந்தள்ளி வைத்தல் என்பது ஒரு மாற்றமாகும். இந்தக் காலப்பகுதியிலேயே குழந்தையும் தாயும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்கின்றனர். அனேக குழந்தைகள் அடிக்கடி கதறி அழுகின்றனர். இதன் பொருள் என்ன, மற்றும் குழந்தை எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிவதும் கடினமானதாக இருக்கலாம். இப் புதிய குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்க முடியுமாயினும், ஆரம்ப காலகட்டத்தில் **அனேகமாக இது கடினமாகவும் சவால்கள் நிறைந்ததாகவும்** இருக்கும். ஆயினும் இது சாதாரண ஒரு விடயமாகுமென்பதுடன் அனேக தாய் தந்தையரின் நிலையும் இதுவேயாகும்.

எனவே இவ்வாறான சவால்களை எதிர்நோக்குவதற்கு „கட்டில்வாரம்“ தொடர்பான பல்வேறு சேவைகளை அறிந்திருத்தலும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுதலும் உதவியாக இருக்கும். குடும்பச் சுற்றாடலிலிருந்து அல்லது அயலவர்களிடமிருந்து நீங்கள் விரும்பியவாறு உதவியைப் பெறமுடியாத பட்சத்தில், உங்களுக்கு ஒத்துழைப்பு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்க வேண்டும். விசேடமாகப் பயிற்றப்பட்டவர்கள் என்ற ரீதியில் பெண் மருத்துவத் தாதிகள், தாய்/தந்தையருக்கான ஆலோசகர்கள் மற்றும் சிறுவர்மருத்துவர்கள் போன்றவர்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்கி உறுதுணையாக இருக்கின்றனர். இவர்கள் தாய் மற்றும் குழந்தையின் உடல்நலம் பற்றி மட்டுமன்றி முழுக்குடும்பத்தினதும் புதிதாக உருவாகியுள்ள நிலைமை தொடர்பான பணிகளில் ஈடுபடுகின்றனர்.

மகப்பேற்றுக்கு முன்னதாகவே நீங்கள் பல்வேறு துறைசார் நபர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் யார் உங்களுக்குரிய தாய்மாருக்கான ஆலோசகர், யார் உங்களது குடும்ப மருத்துவத் தாதி அல்லது யார் உங்களது குழந்தை மருத்துவர் என்பனவற்றை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

இச் சிறு கைநூலில் மிக முக்கியமான சேவை வழங்கல்கள் மற்றும் முகவரிகள் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

# உங்கள் „கட்டில்வாரகாலத்தில்“ குடும்ப மருத்துவத் தாதியிடமுள்ள வரை நீங்கள் நல்லதொரு கையில்.

www.baslerhebamme.ch

**உங்கள் குடும்ப மருத்துவத் தாதி** „கட்டில்வாரத்தின்“ இக்கட்டான முக்கிய காலகட்டத்தில் உங்களை குடும்பமாகப் பராமரிப்பதுடன், புதிதாகப்பிறந்த குழந்தையுடன் நாளாந்த வேலைகளைச் சமாளிப்பதில் **உதவி வழங்குவார்.** உங்கள் குழந்தை பிறந்த பின்னர் தொடர்ந்து வரும் பத்து நாட்களுக்கு உங்கள் குடும்ப மருத்துவத் தாதி, அவசியமாயின் ஒவ்வொரு நாளும் உங்கள் வீட்டுக்கு வந்து நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள் என்று உங்களைப் பார்வையிடுவார்.

இதன்பொழுது குடும்ப மருத்துவத் தாதி தாயினதும் புதிதாகப்பிறந்த குழந்தையினதும் உடல்நலத்தினை **பரிசீலனை** செய்வார். அதாவது, உதாரணமாக குருதிச் சுற்றோட்டம் பரிசோதிக்கப்பட்டு, கருப்பைநிலை தொட்டுப்பார்க்கப்பட்டு, குழந்தை பிறக்கையில் ஏற்பட்ட காயம் எவ்வறுள்ளது என்பது அவதானிக்கப்படுவதுடன் வாராந்த இரத்தப் பெருக்கு கேட்டறியப்படும்.

குழந்தைக்கு பாலூட்டும் பொழுது உதவியளித்தலும் ஒத்தாசை நல்குதலும் தேவையேற்படின் அல்லது அவசியமாயின் பாலூட்டலை நிறுத்துவதிலும் உதவியளித்தல் ஏனைய முக்கிய பணிகளாகும். உங்கள் குடும்ப மருத்துவத் தாதி புதிதாகப் பிறந்த உங்கள் குழந்தையைப் பராமரிப்பதிலும் கவனிப்பதிலும் **ஒத்தாசை வழங்கி** அதன் நிறைஅதிகரிப்பை பரிசீலித்து தொப்புளைச் சுற்றியுள்ள காயம் குணப்படுத்தும் நடைமுறைகள் உள்ளடங்கலாக மேலும் பலவழிகளில் உதவிகளை நல்குவார்.

பாஸல் நகர குடும்ப மருத்துவத் தாதிகள், உடல் மீழ்கட்டமைப்பு மற்றும் இடுப்பின் அடித்தளப் பயிற்சிவகுப்புக்களை வழங்குவதுடன் பாலியல் மற்றும் குடும்பத் திட்டமிடல் பற்றிய தகவல்களையும் வழங்குவார்கள். நெருக்கடியான நிலைமைகளில் உரிய துறைசார் நிலையங்களுடன் மிக நெருக்கமாக ஒன்றிணைந்து பணியாற்றுவர். இவ்வாறான பல பணிகளையும் அதிக அர்ப்பணிப்புடன் இருபத்திநாலு மணிநேரமும், **365 நாட்களும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறைநாட்களிலும் கூட** மேற்கொள்கின்றனர்.

குழந்தை இறந்து பிறத்தல் அல்லது கருச்சிதைவு ஏற்பட்ட பின்னரும் கூட இவ்வாறான குடும்பங்களை நுட்பமாகப் **பராமரித்து அவர்களைக் கண்காணித்தல்** இவர்களது பணிகளுக்குரிய பண்புகளாகும்.

இதுபோன்றே பேரதிர்ச்சியுடன் கூடிய கடினமான மகப்பேற்றின் பின்னர் சம்பந்தப்பட்ட பெண்களுக்கும் குடும்பத்தினர்க்கும் ஆதரவு நல்கி உதவியளிக்கின்றனர். பித்தியேகமாக சிறப்புப் பயிற்சி பெற்ற குடும்பத் தாதியர் மாற்றீடான சிகிச்சைமுறைகளாகிய ஹோமியோபதி, மூலிகைச்சிகிச்சை, அக்குப்புங்ருர், சுவாசச்சிகிச்சை, கற்பமயாயிருக்கையில் குழந்தை “மஸாஜ்“, மகப்பேறு மற்றும் „வாரக்கட்டிலில்“ மகப்பேறு போன்ற சேவைகளையும் வழங்குகின்றனர்.

குடும்ப மருத்துவத் தாதிகள் தமது பணிகள் மூலமாக **குழந்தையினதும் தாயினதும் உடல்நலமேம்பாட்டிற்கு** பாரிய பங்களிப்பினை வழங்குகின்றனர். தமது ஆலோசனை மற்றும் தகவல்கள் மூலமாக ஆரோக்கியமானதொரு „கட்டில்வார“ நடைமுறைக்கு உதவுவதுடன் நீண்டகால அடிப்படையில் முழுக்குடும்பத்திலும் சுமூகமானதொரு சூழ்நிலைக்கு தமது பங்களிப்பை நல்குகின்றனர். குழந்தை பிறந்த பின்னர் பத்து நாட்கள் காலப்பகுதியிலான „கட்டில்வாரத்தின்“ பொழுது வீட்டில் வந்து பராமரித்தலுக்கான செலவுகளை உங்களது அடிப்படைக் காப்புறுதி பொறுப்பேற்றுக் கொள்கின்றது. இது போலவே தாய்ப்பாலூட்டும் முழுக்காலப்பகுதியிலும் மூன்று தடவை வழங்கப்படும் பாலூட்டல் ஆலோசனைகளுக்கான செலவுகளும் பொறுப்பேற்கப்படுகின்றது, இவ் ஆலோசனை மகப்பேற்றுக்குப் பின்னர் வரும் 11 வது நாளிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

நீங்கள் முன்கூட்டியே உங்கள் பாஸல் நகர குடும்ப மருத்துவத் தாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், குறிப்பாக உங்கள் குழந்தையின் மகப்பேற்றுக்கென எதிர்பார்க்கப்படும் திகதி, விடுமுறைகாலத்தில் அல்லது விடுமுறைநாட்களில் வரும் பட்சத்தில் அவர்கள் மகிழ்ச்சியடைவர். ஏதாவது கேள்விகள் மற்றும் உளக்கிடக்கைகள் இருப்பின், மின்னஞ்சல மூலமாகவோஅல்லது தொலைபேசி மூலமாகவோ நீங்கள் உரிய குடும்ப மருத்துவத் தாதியுடன் தொடர்புகொள்ளலாம். முகவரிகளையும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களையும் www.baslerhebamme.ch. என்ற இணைய முகவரியின் கீழ் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். „ஹெல்ப்லைன் குடும்ப தொடக்கம்“ ஊடாக 8:00 - 20:00 மணிக்கிடைப்பட்ட நேரத்தில் (திங்கள் – ஞாயிறு) குடும்ப மருத்துவ தாதிகள் தொலைபேசி மூலமான ஆலோசனைகளை உங்களுக்கு வழங்குவதுடன் குடும்ப மருத்துவ தாதி ஒருவரை உங்களுடன் தொடர்புபடுத்தி விடுவர்: தொலைபேசி: 0848 622 622.

உங்கள் குடும்ப மருத்துவ தாதியின் பெயர்:

முகவரி:

தொலைபேசி:

**HELPLINE**
FAMILY**START**
BEIDER BASEL
8.00 – 20.00 UHR
**0848 622 622**

# மகப்பேற்றிலிருந்தே தாய்- மற்றும் தந்தையருக்கான ஆலோசனைவழங்கல் பாஸல்-நகர்.

**0 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளையுடைய பெற்றோருக்கான பாஸலிலுள்ள துறைசார் நிபுணத்துவ நிலையம்**

**www.muetterberatung-basel.ch**

பாஸல்-நகர தாய் தந்தையருக்கான ஆலோசனை நிலையம் 0 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளையுடைய குடும்பங்களுக்கென பல்வேறு ஆலோசனை வழங்கல்களை அளிக்கின்றது. இச் சலுகைவழங்கல் சகல குடும்பத்தினர்க்கும் **இலவசமாக** வழங்கப்படுவதுடன் கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றது:

- திங்கள் முதல் வெள்ளி வரை தொலைபேசி மூலமாக ஆலோசனை வழங்குதல்
- ஆலோசனை வழங்கும் நிலையங்களில் முன்பதிவின்றியும் முன்பதிவுடனும் ஆலோசனை வழங்குதல் (திங் - வெள்ளி, www.muetterberatung-basel.ch இன் கீழ் பார்க்கவும்)
- வீட்டுக்குச் சென்று ஆலோசனை வழங்குதல்
- உடல் நலத்தை ஊக்குவிக்கும் பயிற்சிநெறிகளும் வட்டமாக இருந்து கலந்துரையாடலும்

பாஸல்-நகர தாய் தந்தையருக்கான ஆலோசனை நிலையம் உங்கள் குழந்தையின் முதல் ஐந்து வருடகாலத்தில், பெற்றோர் என்ற ரீதியில் உங்கள் பணியில் உங்களுக்கு **ஒத்துழைப்பு** வழங்குகின்றது. உயர் துறைசார் டிப்ளோமா-பட்டம் பெற்ற தகுதிவாய்ந்த பெண்தாதியர்களைக் கொண்ட அனுபவமுள்ள குழுவொன்று, தாய்ப்பாலூட்டல், உணவு, அபிவிருத்தி, வளர்ச்சி, நித்திரை, குழந்தைவளர்ப்பு, பராமரிப்பு மற்றும் சுகாதாரம் போன்ற தலைப்புக்களின் கீழ் உங்களுக்கு ஆலோசனை வழங்குகின்றது. இவ்வாறான பெண்ஆலோசகர்கள் சிக்கல்கள் நிறைந்த நிலைமைகள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பதுடன் எவ்வாறு இவற்றைச் சமாளிப்பது என்பது பற்றியும் கூறுவர். இவர்கள் துறைசார் நிபுணத்துவ நிலையங்கள், ஆலோசனை நிலையங்கள் மற்றும் பயிற்சிநெறி வழங்கல்சேவைகள், தொடர்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள், நிவாரணம் பெறும் சாத்தியக் கூறுகள் மற்றும் சந்தித்து கலந்துரையாடும் இடங்கள் பற்றியும் உங்களுக்கு தகவலளிப்பர். தாய்மாருக்கான பெண் ஆலோசகர்கள் **இரகசியங்களைப் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர்.**

ஜேர்மன், பிரெஞ்சு, இத்தாலி, ஆங்கிலம் மற்றும் ஸ்பானிய மொழிகளில் ஆலோசனை வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வேறு மொழிகளில் ஆலோசனை வழங்குவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் ஒழுங்குசெய்யப்படுவர். உங்கள் மகப்பேறு தொடர்பான பதிவு கிடைக்கப்பெற்ற பின் உங்கள் பெண்ஆலோசகர் உங்களுடன் **தொடர்புகொண்டு,** சாத்தியமாயின் தொலைபேசியூடாக, தனது சேவைவழங்கல் பற்றி உங்களுக்கு அறிமுகப்படுத்துவார். தேவைக்கேற்ப முதலெழும் கேள்விகள் பற்றி பேசப்பட்டு கலந்தாலோசிக்கப்படும் அல்லது ஆலோசனைவழங்கல் ஒன்றுக்கான தவணை (திகதி) வீட்டில் அல்லது ஆலோசனை நிலையத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருப்பின், ஆலோசனை நிலையத்தில் தவணை (திகதி) ஒன்றினை பெறுவதற்கு விரும்பின், அல்லது பெண் ஆலோசகர் (உங்கள்) வீட்டுக்கு வருவதனை நீங்கள் விரும்பும் பட்சத்தில், மகப்பேற்றுக்கு முன்பும் மகப்பேற்றுக்குப் பின்னர் எந்த நேரமும் பாஸல்-நகர தாய் தந்தையருக்கான ஆலோசனை நிலையத்துடன் **தொலைபேசி** மூலமாக நீங்கள் தொடர்புகொள்ள முடியும்.


**பாஸல்-நகர தாய் தந்தையருக்கான ஆலோசனை நிலையம்**
**0 முதல் 5 வயது வரையிலான**
**குழந்தைகளின் பெற்றோர்க்கான பாஸல்**
**துறைசார் நிபுணத்துவ நிலையம்**
Freie Strasse 35
4001 Basel

**தொலைபேசி 061 690 26 90**
தொலைநகல் 061 690 26 91
info@muetterberatung-basel.ch
www.muetterberatung-basel.ch




தாய் தந்தையருக்கான பெண் ஆலோசகரின் பெயர்:

உங்கள் பகுதிக்குரிய ஆலோசனை நிலையத்தின் முகவரி:

ஆலோசனை நிலையம் திறந்திருக்கும் நேரங்கள்:

# ஆரம்பத்திலிருந்தே ஒரு குழந்தைமருத்துவர்

www.kindermedizin-regiobasel.ch

நீங்கள் எவ்வாறு உங்கள் **பொது (வீட்டு) மருத்துவரைக்** கணிப்பிடுகின்றீர்களோ, அவ்வாறே உங்கள் குழந்தைக்கென்றொரு **குழந்தை மருத்துவரையும்** உங்களது **தொடர்புநபராகவும்** சுகாதாரம் அல்லது சுகயீனமுற்றிருத்தல் சம்பந்தப்பட்ட கேள்விகள் ஏற்படும்பொழுது உங்களுக்கு ஆலோசனை வழங்கி வழிநடத்துவதற்கு தெரிவுசெய்தல் வேண்டும்.

ஒவ்வொரு வயதிலும் **மிகமுக்கியமான வளர்ச்சிப் படிநிலைகள்** இடம்பெறுகின்றன. விசேடமாக முதலாவது வயதில் இவை மிக அதிகமானவையாகும். குழந்தை மருத்துவர் உங்கள் குழந்தையின் உடலியல், மனோவியல் மற்றும் உளவியல் ரீதியான வளர்ச்சியினை **மதிப்பீடு செய்வதுடன்,** முற்காப்பு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு **தடுப்பூசிகளைப்** போடுவார். உங்கள் குழந்தையின் வளர்ச்சி அல்லது உடல்நலம் பற்றி உங்களுக்கு கவலைகள் இருப்பின், அவை பற்றியும் உங்கள் குழந்தை மருத்துவருடன் பேசிக்கொள்ள முடியும். மேலும் குழந்தை மருத்துவருடன், உதாரணமாக **உணவு** அல்லது நித்திரை கொள்ளுதல் போன்றவை பற்றியும் கூட பேசிக் கலந்தாலோசிக்க முடியும்.

**மகப்பேற்றுக்கு முன்னராகவே ஒரு குழந்தை மருத்துவரைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.**

இதற்கானதொரு பட்டியலை தொலைபேசிப் புத்தகத்தில் அல்லது www.kindermedizin-regiobasel.ch. இன் கீழ் பெற்றுக் கொள்ளலாம். மேலும், நீங்கள் பாஸல் நகர சிறுவர் மற்றும் இளையோர் சுகாதாரநலச் சேவையின் (St.Alban-Vorstadt 19, 4042 Basel; Tel. 061 267 45 20) எல்லா குழந்தை மருத்துவர்களையும் கொண்ட ஒரு பட்டியலிலிருந்து கூட ஒருவரைத் தெரிவு செய்து கொள்ள முடியும். இப் பட்டியல் குடியிருப்புப் பகுதிகாளாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**முதலாவது முற்காப்பு மருத்துவ பரிசேதனைக்கான தவணை.**
நீங்கள் உங்கள் குழந்தையுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தவுடன், முடியுமானவரை விரைவாக உங்கள் குழந்தை மருத்துவருக்கு இதனை **அறிவிப்பதுடன்** உடனடியாகவே **முதலாவது மருத்துவக் கட்டுப்பாட்டு பரிசோதனைக்கான** தவணை (திகதி) யை வைத்துக் கொள்ளுங்கள்.

முதலாவது மருத்துவ பரிசோதனை அண்ணளவாக **இரண்டு வாரத்தில்** நடைபெற வேண்டும். மேலும், உங்கள் குழந்தையை நீங்கள் கர்ப்பம் தரித்திருக்கும் பொழுதே சுகாதாரக் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பதிவுசெய்யுங்கள். சுவிஸ் நாட்டில் கட்டாயமாக ஒவ்வொருவரும் காப்புறுதி ஒன்றைச் செய்திருத்தல் வேண்டும்.

உங்கள் குழந்தைக்கு **கட்டாய சுகாதாரக் காப்புறுதி** (KVG) மூலமாக நோய்கள் மற்றும் விபத்துக்களுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. **முன்காப்பு மருத்துவ பரிசோதனைகளுக்கான** செலவுகள் யாவும் இதன மூலம் **உள்ளடக்கப்படுகின்றது.** நீங்கள் ஒவ்வொன்றுக்கும் உங்கள் பங்காகிய 10% இனைப் பொறுப்பேற்க வேண்டும்.



குழந்தை மருத்துவரின் பெயர்:

முகவரி:

தொலைபேசி:



# முகவரிகள்:

**Universitäts-Kinderspital beider Basel (UKBB)**
Spitalstrasse 33
4056 Basel
Tel. 061 704 12 12
www.ukbb.ch

**Frauenklinik Universitätsspital Basel**
Spitalstrasse 21
4056 Basel
Tel. 061 265 25 25
www.unispital-basel.ch

**Spitex Basel, für Schwangere und Wöchnerinnen**
Feierabendstrasse 44
4051 Basel
Tel. 061 686 96 15
www.spitexbasel.ch

**Dipl. Stillberaterinnen IBCLC**
Listenbezug und Kontaktperson der Region Basel:
Frau Monica Birchler
Tel. 061 265 90 94

**La Leche Liga**
Telefonische Stillberatung und Stilltreffen
Listenbezug und Kontaktperson der Region Basel:
Frau Claudia Schlegel
Tel. 061 302 44 91

**பெற்றோர் அவசர அழைப்பு**
அளவுக்கதிகமான சுமைகளைக் கொண்டுள்ளதாகவும் தமது குழந்தை தொடர்பாக அதிக கவலையுடனுமுள்ள மற்றும் உடனடியாக ஆலோசனை தேவைப்படும் பெற்றோர்களுக்கென 24 மணி நேர தொலைபேசி மூலமான ஆலோசனை
தொலைபேசி: 0848 35 45 55
www.elternnotruf.ch

**FamilyStart - Helpline**
Bei Fragen zu Schwangerschaft, Geburt, Wochenbett und Stillzeit täglich von 8.00 - 20.00 Uhr telefonische Hebammen-Beratung und - Vermittlung
Tel. 0848 622 622

# இணையத் தளங்கள்.

**www.baslerhebamme.ch**

**www.kindermedizin-regiobasel.ch**

**www.muetterberatung-basel.ch**

www.einelternfamilie.ch

www.muetterhilfe.ch

www.mutterglueck.ch

www.postnatale-depression.ch

www.profamilia.ch

www.schreibabyhilfe.ch

www.swissmom.ch

www.zwillinge.ch

Gesundheitsdepartement des Kantons Basel-Stadt
**Bereich Gesundheitsdienste**
▶ **Abteilung Prävention**

Tamil/2013/500

**Gesundheitsdienste Basel-Stadt**
**Abteilung Prävention**
St. Alban-Vorstadt 19
4052 Basel
Tel. 061 267 45 20

abteilung.praevention@bs.ch
www.gesundheit.bs.ch